செ.வெ. எண்: 318 நாள்: 30.05.2012

# சென்னைப் பெருநகரில் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வியின் சேவையைபெற செட்–டாப் பாக்ஸ் தேவையின் எண்ணிக்கையை தெரிவிக்க ஆப்பரேட்டர்களுக்கு காலக்கெடு 15.06.2012 வரை நீட்டிப்பு.

சென்னைப் பெருநகரப்பகுதியில் உள்ள தமிழ்நாடு கேபிள் டி.வி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள கேபிள் டி.வி ஆப்பரேட்டர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள சந்தாதாரர்களுக்கு வழங்குவதற்காக எத்தனை செப்–டாப் பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தின் வெப்சைட்டில் ({HYPERLINK "http://www.arasucable.com"}) உள்ள படிவத்தில் ஆன்லைனில் 31.05.2012க்குள் பதிவு செய்யுமாறு ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

சென்னைப் பெருநகரில் உள்ள 2000 ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தில் பதிவு செய்துள்ளபோதிலும், இந்நாள் வரை குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே ஆப்பரேட்டர்கள் தங்கள் பகுதியில் உள்ள சந்தாதாரர்களுக்கு எத்தனை செட்டாப்–பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை பதிவு செய்துள்ளார்கள். இன்னும் பல ஆப்பரேட்டர்கள் தங்கள் பகுதியில் உள்ள சந்தாதாரர்களுக்கு எத்தனை செட்டாப்–பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை பதிவு செய்ய வேண்டி இருப்பதால் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி வெப்சைட்டில் பதிவு செய்ய 15.06.2012 வரை காலக்கெடு நீட்டிப்பு செய்யப்படுகிறது. இந்த நீட்டிப்பு காலத்திற்குள் விடுபட்டுள்ள ஆப்பரேட்டர்கள் அனைவரும் தங்களுக்கு எத்தனை செட்டாப்–பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை தவறாது பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பாக ஏதேனும் உதவி தேவைப்பட்டால் 28221233/28233336 என்ற தொலைபேசிகளில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.